மாதாந்திர உணவுக் கட்டணம் 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுதவிர, பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப்பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகை நாட்களில் சிறப்பு உணவுக் கட்டணமாக தற்போது பள்ளி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தொகை 20 ரூபாயிலிருந்து 40 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கு 40 ரூபாயிலிருந்து 80 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பிறமலைக் கள்ளர் பள்ளிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள 5 கோடி ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. இத்துறையின்கீழ் இயங்கிவரும் 1,354 விடுதிகளில், 1,290 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இக்கட்டடங்களில் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. இத்துறையின்கீழ் இயங்கிவரும் 1,099 பள்ளி விடுதிகளில், 11 பள்ளி விடுதிகள் ஒரு கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சட்டத் துறை, உள் (நீதிமன்றங்கள்) துறை, சமூக நலத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறைக்கு பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அந்தத் துறையினுடைய

உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக நிதிகளை ஒதுக்கித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு துறையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு”

இயல்பாக ஆட்சி நடத்திடும் ஆட்சியாளர் நாட்டில் பருவ மழை பெய்து, விளைச்சலும் நன்கு விளைந்து நிறையும் என்னும் வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கு இலக்கணமாய், எங்கள் இயக்கத்தின் இமையே, இமயத்துப் புகழே, இரக்கத்தின் வடிவே, ஈடில்லா வரமே, வேதனைகள் தீர்த்த எங்கள் வெற்றித் திருமகள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வழி நின்று, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய துணைகொண்டு, நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் நலம் மற்றும் குழந்தைகள் நலம் நாடி, அவர்கள் உரிமைகள் பேணி, விதி 110–ன்கீழ் ஐந்து முத்தான அறிவிப்புகளையும் மற்றும் மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் ஏற்றம் பெற விதி 110–ன்கீழ் மூன்று முத்தான அறிவிப்புகளையும் அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் துறையின் சார்பில் நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினரின் கல்வி, சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்த

2020 மார்ச் 23] [திருமதி சீ. வளர்மதி]

மாண்புமிகு அம்மா அவர்களது வழியில் அயராது உழைக்கின்ற காவேரி காப்பாளர், விவசாயிகளின் தோழர், வேளாண் மண்டலம் கண்ட வெற்றி வேந்தர், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வார்த்தைகளை நிரூபித்து, நிலையான ஆட்சி கண்ட நேர்மையாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் விதி 110–ன்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு முத்தான ஆறு அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு எனது துறையின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமிய மக்களின் பாதுகாவலர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் சிறுபான்மையின மக்களுக்காக 18 மாவட்டங்களில் பல புதிய திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், மசூதிகளில் கணினி வசதி செய்யவும், திறன் பயிற்சி அளிக்கவும் ரூ.24.5 கோடி வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு இஸ்லாமிய மக்களின் சார்பாகவும், சிறுபான்மையின மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. 'கொரோனா வைரஸ்' பரவாமல் தடுத்தல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு போர்க்கால அடிப்படையில் எடுத்துவரும் அதே நேரத்தில், அந்த நோயால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான கூடுதல் வசதிகளை அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்திடத்